# BSNLEU கூட்டணி (UNITED FORUM) அறைகூவல்

## BSNLEU, TEPU, SEWA BSNL, AIBCTES, BMS

## சென்னை தொலைபேசி மாநிலச் சங்கங்கள்

சுற்றறிக்கை எண். 1

தேதி : 30.07.2010

# கோரிக்கைகள்

தோழர்களே !

புதிய ஊதிய மாற்றத்திலும், புதிய பதவி உயர்வுத் திட்டத்திலும் உள்ள சில குறைபாடுகளை களைய நமது கூட்டணி BSNL நிர்வாகத்திடம் பலமுறை எடுத்துரைத்தும், தாமதப் படுத்துவதை கண்டித்து கீழ்கண்ட கோரிக்கைகளுக்காக UNITED FORUM போராட்ட அறைகூவல் விடுத்துள்ளது.

**5.8.2010 - ஆர்பாட்டம்**
**12.8.2010- தார்ணா**

1. BSNL உருவான பிறகு CDA சம்பளத்திலிருந்து IDA சம்பள மாற்றம் செய்யப்பட்ட போது எழுந்துள்ள குறைபாடுகளை நீக்க அமைக்கப்பட்ட அனாமலி கமிட்டி முடிவுகளை உடனே அமுல்படுத்த வேண்டும்.

2. புதிய பதவி உயர்வுத் திட்டத்தில் நமது கூட்டணி சார்பில் கேட்டுக் கொண்ட விளக்கங்களை கொடுத்து, அதற்கேற்றவாறு திட்டத்தில் சில மாற்றங்களை அமுலாக்க வேண்டும்.

3. 1.1.2007 க்குப் பின் பணியில் அமர்த்தப்பட்ட ஊழியர்களுக்கு ஊதியமாற்றத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் களையப்பட உரிய முறைகளை உருவாக்க வேண்டும். அவர்கள் முன்பு பெற்று வரும் ஊதியத்தை விடக் குறைவாக ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் அந்த ஊழியர்களின் ஊதிய பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த வேண்டும்.

4. மத்திய அரசிலும், மற்ற சில பொதுத்துறைகளில் கேசுவல் ஊழியர்கள் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளதைப் போலவே, BSNL லிலும் பணியாற்றும் TSM / CL களை நிரந்தரப்படுத்த வேண்டும். அவர்களுக்கு IDA சம்பளவிகித நிர்ணயத்திற்கு உத்தரவிட வேண்டும்.

5. புதிய பதவி உயர்த்திட்டத்தில் SC / ST ஊழியர்களுக்கு உரிய இட ஒதுக்கீட்டை அளிக்க வேண்டும்

6. நிரப்பபடாமல் உள்ள SC / ST ஊழியர்களுக்கான காலி பணியிடங்களை (Backlog Vacancies) எல்லா கேடர்களிலும் நிரப்ப வேண்டும்.

7. மருத்துவ வசதி (MRS) திட்டத்தில் தற்போதுள்ள சிரமங்களை களையும் வகையில் மாற்றங்களை செய்ய வேண்டும். 16.4.2010 உத்தரவில் இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் மருத்துவ வசதிக்கு அனுமதி என்று குறிப்பிடப்பட்டுள்ள பிற்போக்குத்தனமான முடிவை கைவிட வேண்டும்.

8. நிர்வாகம் முன்வைத்துள்ள ஊழியர் கணக்கீட்டு (New Norms) வரையறைகளை வாபஸ் பெற வேண்டும். ஊழியர் தரப்புடன் முறையாக விவாதித்து முடிவு செய்ய வேண்டும்.

நாம் போராடி பெற்ற திட்டங்களின் முழுமையான பலன் ஊழியர்களுக்கு சென்றடைவதற்கான இப்போராட்டங்களை வெற்றிகரமாக நடத்திட அனைத்துப் பகுதி ஊழியர்களையும் ஒன்றுபடுத்துவோம் ! போராடுவோம் ! வெற்றி பெறுவோம் !

## United Forum - சென்னை தொலைபேசி - முடிவுகள்

1. இப்போராட்ட திட்டங்களை விளக்கிட நமது கூட்டணியின் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள் கிளைச் செயலர்கள் கூட்டம் **3.8.2010** அன்று மாலை 4 மணிக்கு BSNLEU மாநில சங்கத்தில் நடைபெறும்.

2. **5.8.2010** இடைவேளை ஆர்பாட்டத்தை – சென்னை தொலைபேசி GM (S), GM (N), GM (W), GM (C), GM (D) அலுவலகங்கள் முன்பு நடத்த வேண்டும்.

3. **12.8.2010** தார்ணா போராட்டத்தை புரசைவாக்கம் CGM அலுவலகம், முன்பு பெருந்திரளாக நடத்த ஆயத்தபணிகளை மேற்கொள்ள வேண்டும்.

தோழமையுடன்

K.கோவிந்தராஜ்
மா/செ. BSNLEU

J.விஜயகுமார்
மா/செ. TEPU

R.ரவீந்திரன்
மா/செ. SEWA BSNL

S.வில்சன்
மா/செ. AIBCTES

கிருபானந்தம்
மா/செ. BMS